*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி-சென்னை-4*
*10.08.2025 SUNDAY 7.15 AM*

*ஆகாஷவாணி – செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1. *கர்நாடக மாநிலம், பெங்களூருவில் 3 வந்தேபாரத் ரயில் சேவைகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.*
2. *கஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதிக்கு சரக்கு ரயில் சேவை சென்றடைந்துள்ளதால், அப்பகுதி மக்களின் வாழ்க்கை தரம் உயரும் என்று ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.*
3. *ஹிமாச்சலப்பிரதேசத்தில் பெய்து வரும் கனமழையால் அம்மாநில மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.*
4. *அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்பும், ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டினும் வரும் 15ஆம் தேதி சந்தித்து பேசவுள்ளது உலக பிரச்சினைகளுக்கு தீர்வு காண உதவும் என்று இந்தியா கூறியுள்ளது.*
5. *20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய ரக்பீ போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*>>>>>><<<<<<*

*கர்நாடக மாநிலம், பெங்களூருவில் 3 வந்தேபாரத் ரயில் சேவைகளை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.*

*KSR ரயில் நிலையத்தில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் பெங்களூரு - பெலகாவி, அம்ரிட்ஸர் - கத்ரா மற்றும் நாக்பூர் - பூனே இடையே இயக்கப்படவுள்ள ரயில் சேவைகளை அவர் கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்.*

*பெங்களூருவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மெட்ரோ ரயில் பாதையில் சேவைகளை தொடங்கி வைக்கும் பிரதமர், R.V சாலையிலிருந்து ராகிகுட்டா வரை மெட்ரோ ரயிலில் பொதுமக்களுடன் பயணிக்கவுள்ளார்.*

*15 ஆயிரத்து 610 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள பெங்களூரு மெட்ரோ ரயில் சேவையின் மூன்றாவது கட்டப் பணிகளுக்கு அவர் அடிக்கல் நாட்டவுள்ளார்.*

*பெங்களூருவில் புதிய போக்குவரத்து மேம்பாட்டு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவுள்ள பிரதமர், பொதுக்கூட்டம் ஒன்றிலும் உரையாற்றவுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*கஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதி நாட்டின் ஏனைய சரக்கு ரயில் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது, அப்பகுதி மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த உதவும் என்று ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.*

பஞ்சாபிலிருந்து புறப்பட்ட சரக்கு ரயில் கஷ்மீர் பள்ளத்தாக்கின் அனந்தநாக்கில் உள்ள சரக்கு போக்குவரத்து முனையத்தை அடைந்த காணொலியை தமது சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்துள்ள அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ரயில் போக்குவரத்து இல்லாத போது, சரக்கு போக்குவரத்திற்காக கஷ்மீர் மக்கள் மேற்கொண்ட செலவு இனி குறையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜம்மு கஷ்மீரில் உதம்பூர் - ஸ்ரீநகர் - பாரமுல்லா பகுதிகள் ரயில்பாதை மூலம் இணைக்கப்பட்டதை அடுத்து, கஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதிக்கு நாட்டின் பிற பகுதிகளிலிருந்து நேரடி சரக்கு ரயில் போக்குவரத்து தொடங்கியுள்ளது.

>>>>>><<<<<<

உத்தரபிரதேச மாநிலம், மதுராவில் உள்ள பாங்கி பிஹாரி மகராஜ் கோவிலின் அன்றாட நடவடிக்கைகளை மேற்பார்வையிடவும், நிர்வகிக்கவும் அலஹாபாத் உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி அஷோக்குமார் தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்றை நியமித்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தக் கோவிலின் அறக்கட்டளை அவசரச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட குழுவின் செயல்பாட்டை, தற்காலிகமாக நிறுத்தி வைத்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

>>>>>><<<<<<

சிங்கங்கள் தினம் இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

இதனை முன்னிட்டு பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆசிய சிங்கங்களின் அழிவை தடுத்து, அவற்றை பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக, குஜராத் மாநிலம், போர்பந்தர் அருகேயுள்ள பார்டா வனவிலங்கு சரணாலயத்தில் ஏராளமான சிங்கங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு, அம்மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் போது 891 சிங்கங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

இல்லந்தோறும் மூவர்ணக் கொடி ஏற்றும் இயக்கத்திற்கு, சிக்கிம் மாநில அரசு விரிவான ஏற்பாடுகளை செய்துள்ளது.

*அம்மாநில கலாச்சாரத்துறையின் சார்பில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் மூவர்ணக்கொடி ஏற்றப்படவுள்ளது.*

*மக்கள் தங்கள் இல்லங்களில் மூவர்ணக் கொடியை ஏற்றுவதற்காக ஒரு லட்சம் தேசியக்கொடிகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<<*

*ஹரியானா மாநிலம், குருகிராமில் நில ஒப்பந்தம் தொடர்பாக மக்களவை உறுப்பினர் திருமதி. பிரியங்கா காந்தியின் கணவரும், தொழிலதிபருமான திரு. ராபர்ட் வதேரா, 58 கோடி ரூபாய் லஞ்சம் பெற்றுள்ளதாக அமலாக்க இயக்குரகம் தெரிவித்துள்ளது.*

*இதுதொடர்பான வழக்கு விசாரணை நடைபெற்று வரும் சிறப்பு நீதிமன்றத்தில், அந்த இயக்குநரகம் தாக்கல் செய்துள்ள குற்றப்பத்திரிகையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.*

*இரண்டு நிறுவனங்கள் தொடர்பான ஒப்பந்தத்தில் இந்த மோசடி நடைபெற்றுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*ஏற்கனவே, இந்த புகார் தொடர்பாக தில்லியில் உள்ள சிறப்பு நீதிமன்றம், திரு. ராபர்ட் வதேராவிற்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது.*

*>>>>>><<<<<<*

*அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்பும், ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டினும் வரும் 15ஆம் தேதி சந்தித்து பேசவுள்ளது உலக பிரச்சினைகளுக்கு தீர்வு காண உதவும் என்று இந்தியா கூறியுள்ளது.*

*இதுதொடர்பாக வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், யுக்ரைன் – ரஷ்யா இடையேயான மோதலுக்கு தீர்வு ஏற்படவும் இந்த பேச்சுக்கள் உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*ரஷ்யா – யுக்ரைன் இடையேயான மோதலுக்கு பேச்சு வார்த்தையின் மூலம் தீர்வு காண வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*ரஷ்யாவுக்கு ராஜீய ரீதியில் நிர்பந்தம் அளிப்பதன் மூலமாக, யுக்ரைன் உடனான ரஷ்யாவின் மோதலுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என்று ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.*

இதுதொடர்பாக பிரான்ஸ் அதிபர் திரு. இமானுவேல் மேக்ரோன், இத்தாலி பிரதமர் திருமதி. ஜியோர்ஜியா மெலோனி, ஜெர்மன் அதிபர் திரு. ஃபெட்ரிஜ் மெர்ஸ், போலந்து பிரதமர் திரு. டொனால்ட் டஸ்க், பிரிட்டன் பிரதமர் திரு. கெய்ர் ட்ராமர், ஃபின்லாந்து பிரதமர் திரு. அலெக்சாண்டர், ஐரோப்பிய யூனியன் தலைவர் திருமதி. உருசுலா ஒன் டேர் லேயன் ஆகியோர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

யுக்ரைனில் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை தடுக்க அமெரிக்க அதிபர் திரு. டோனால்ட் ட்ரம்ப் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை வரவேற்பதாக அவர்கள் அதில் தெரிவித்துள்ளனர்.

யுக்ரைனுக்கு ராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஆதரவளிக்கவும் இந்நாடுகளின் தலைவர்கள் முன்வந்துள்ளனர்.

>>>>>><<<<<<

சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் பல மாதங்கள் தங்கியிருந்து ஆய்வு மேற்கொண்ட அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் நாடுகளைச் சேர்ந்த 4 விண்வெளி வீரர்கள் நேற்று பத்திரமாக பூமிக்கு திரும்பினர்.

ஸ்பேஸ் எக்ஸ் விண்கலம் இவர்களை பத்திரமாக பூமிக்கு அழைத்து வந்துள்ளதாக நாசா தெரிவித்துள்ளது.

இவர்கள், சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் 148 நாட்கள் தங்கியிருந்து பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டனர்.

விண்வெளியில் தங்கியிருந்த காலத்தில் அங்கு ஏற்படும் மன மற்றும் உடல் மாற்றங்கள், மூளையிலிருந்து இதயத்திற்கு செல்லும் ரத்த ஓட்டம், சந்திரனுக்கான எதிர்கால பயணம் உட்பட பல்வேறு ஆய்வுகளை அவர்கள் மேற்கொண்டனர்.

சர்வதேச விண்வெளி மையத்திலிருந்து ஆராய்ச்சி மாதிரிகளையும் அவர்கள் பூமிக்கு கொண்டுவந்துள்ளதாக நாசா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

>>>>>><<<<<<

இந்தியாவின் அண்டை நாடான பங்களாதேஷின் நாடாளுமன்ற தேர்தல் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெறும் என்று அந்நாட்டு தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

டாக்காவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய பங்களாதேஷ் தலைமை தேர்தல் ஆணையர் திரு. நஸீர் உதின், வரும் டிசம்பர் மாதம் தேர்தல் அட்டவணை வெளியிடப்படும் என்று கூறினார்.

*>>>>>><<<<<<*

*ஹிமாச்சலப்பிரதேசத்தில் பெய்து வரும் கனமழையால் அம்மாநில மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.*

*வரும் 15ஆம் தேதி வரை, அம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.*

*சில பகுதிகளில் கன முதல் மிக கனமழை பெய்யும் என்பதால் ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*

*அடுத்த 24 மணி நேரத்தில் மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில் கனமழை பெய்யும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்நிலையில், வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமக தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

*>>>>>><<<<<<*

*இதனிடையே, ஹைதாரபாதில் நேற்று மாலை பெய்த கனமழையால் நகரின் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் தேங்கியது.*

*வனஸ்தைலாபுரம், ஹயத்நகர் ஆகிய இடங்களில் 2 மணி நேரத்தில் 100 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.*

*நம்பள்ளி என்னுமிடத்தில் அதிகபட்சமாக 112 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.*

*ஹைதராபாத் நகரில் இம்மாதம் மூன்றாவது முறையாக 100 மில்லி மீட்டருக்கும் அதிகமாக மழை பெய்துள்ளதாக வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.*

*மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் அடுத்த சில நாட்களுக்கு கனமழை நீடிக்கும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.*

*>>>>>><<<<<<*

*20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய ரக்பீ போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*பீகாரில் நடைபெற்று வரும் இப்போட்டியில், ஏற்கனவே கஜகஸ்தான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகளை இந்தியா வென்றது.*

*நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் 31-7 என்ற புள்ளிக்கணக்கில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை வென்றதன் மூலம் இந்தியா, அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*>>>>>><<<<<<*

*20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து தகுதிச்சுற்று போட்டியில் இந்தியா இன்று மியான்மரை எதிர்கொள்கிறது.*

*மியான்மரில் இப்போட்டி பிற்பகல் 3 மணிக்கு தொடங்குகிறது.*

*>>>>>><<<<<<*

*துரந்த் கோப்பை கால்பந்து போட்டியின் காலிறுதி ஆட்டத்திற்கு மோகன் பஹான் அணி முன்னேறியுள்ளது.*

*கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற கடைசி லீக் ஆட்டத்தில் மோகன்பஹான் 5-1 என்ற கோல்கணக்கில் டைமன் ஹார்பர் அணியை வென்றது.*

*>>>>>><<<<<<*

*சீனாவில் நடைபெற்று வரும் உலக விளையாட்டுப் போட்டிகளின் ஒரு பகுதியாக கயிறு இழுக்கும் போட்டி இன்று தொடங்குகிறது.*

*>>>>>><<<<<<*

*சென்னையில் நடைபெற்று வரும் சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியின் மூன்றாவது சுற்றில், இந்தியாவின் அர்ஜுன் எரிகேஸி வெற்றி பெற்றுள்ளார்.*

*>>>>>><<<<<<*